அ.வ.எண். **54/2021**　　　வா.சா.**2 –** தானுமலையன்　**14.11.2024**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, **3**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் BBA., (CA) பட்டப்படிப்பை 2023ம் வருடம் படித்து முடித்தேன். நானும், என் அக்காவும் பள்ளிப்படிப்பை மெட்ரிக்குலேசன் தனியார் பள்ளியில் படித்தோம். 2013ம் வருடத்தில் நான் 5 அல்லது 6ம் வகுப்பு படித்தேன். அந்த சமயத்தில் என் அக்கா 9 அல்லது 10ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார். என் அக்கா 2ம் வாதிக்கு கடந்த வருடம் திருமணமானது. என் அப்பா 2ம் பிரதிவாதி மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைத்தார் என்றால் இல்லை. என் அக்கா 2ம் வாதி தற்போது காந்திகிராமத்தில் வசித்து வருகிறார். என் அக்கா கரூர், HDFC வங்கி கிளையில் பணிபுரிந்து வருகிறார். நான் தற்போது சென்னையில் உள்ள TCS நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். 3ம் பிரதிவாதியை நான் பார்த்துள்ளேன். 3ம் பிரதிவாதி பார்த்து வந்த பெட்ரோல் பங்கிற்கு நான் சென்றுள்ளேன். அவரை நான் தாத்தா என்று அழைப்பேன் என்றால் சரியல்ல. நான் படிக்கும் காலத்தில் என் அப்பாவிற்கு அதிக கடன் இருந்ததா என்றால் கடன் இருந்தது. 3ம் பிரதிவாதியின் வயது 85 என்றும், நான் வழக்குரையில் தவறாக 50 வயது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் சொன்னால் அவர் வயது பற்றி எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகளுக்கும், எனக்கும் எந்த பிரச்சினையும் கிடையாது என்றால் வீடு பிரச்சினையை தவிர வேறு பிரச்சினை கிடையாது. வழக்குச்சொத்தில் வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல. நானும், என் அம்மாவும் மட்டும் வசித்து வருகிறோம். 1, 2 பிரதிவாதிகள் 25.11.2018க்கு பிறகு தனியாக சென்றுவிட்டனர் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் நான் .........

கூறியுள்ள விலாசத்தில் 1, 2 பிரதிவாதிகள் வசிக்கவில்லை என்றும், நான் தவறான விலாசத்தை கூறியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. சாட்சியம் அளிப்பதற்காக என்னை வழக்கறிஞர் அலுவலகத்திற்கு என் அப்பாதான் அழைத்துச்சென்றார் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் எங்களுடன் வஞ்சகக்கூட்டு சேர்ந்து வழக்கு நடத்தாமல் வருகையில்லாதவர்களாகி இருந்து வருகின்றனர் என்றால் சரியல்ல.

வழக்குச்சொத்தும், திருமாநிலையூரில் உள்ள விவசாய நிலமும் என் தாத்தா கண்ணன் என்பவர் சொத்து. வழக்குச்சொத்தை பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் பெயரில் என் தாத்தா கண்ணன் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் அனுபவித்து வந்து, அவர்களுக்கு பிறகு அந்த சொத்தை நான் அடைய வேண்டும் என்று உயில் எழுதி வைத்துள்ளார். நான் அந்த உயிலை படித்து பார்த்துள்ளேன். உயிலை தவிர வழக்குச்சொத்து சம்மந்தப்பட்ட மூல ஆவணங்களையும் நான் படித்துள்ளேன். உயில் ஆவணத்தில் 1ம் பிரதிவாதிக்கு வாழ்நாள் பாத்தியமும், 2ம் பிரதிவாதிக்கு முழு உரிமையும் ஏற்படுத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தாத்தா இறந்துவிட்டார். என் தாத்தா கண்ணன் 12.03.2012 அன்று இறந்தார் என்றால் தேதி எனக்கு தெரியாது. என் தாத்தா இறந்தபிறகு அவர் எழுதி வைத்த உயில் அமுலுக்கு வந்துவிட்டது. என் தாத்தா கண்ணன் எழுதி வைத்த உயில் ஆவணத்தில் வாதிகளாகிய எங்களுக்கு எந்த உரிமையும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தை நான் கூட்டாக அனுபவித்து வருகிறேன் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தை விற்பனை செய்யக்கூடாது என உயிலில் ........

குறிப்பிடப்பட்டுள்ளது என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு வழக்குச்சொத்தை விற்பதற்கு எந்தவித உரிமையும் கிடையாது என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரயம் சட்டத்திற்கு புறம்பானது என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தில் எனக்கு உரிமையுள்ளது என நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து பூர்வீக பாத்தியப்பட்டது என்று நான் சொல்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து என் தாத்தாவிற்கு தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

என் தாத்தாவிற்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. வழக்குச்சொத்து சம்மந்தப்பட்ட பாகப்பிரிவினை வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. வழக்குச்சொத்து சம்மந்தப்பட்ட பாகப்பிரிவினை வழக்கில் வழக்குச்சொத்துக்கள் என் தாத்தா கண்ணனின் தனிப்பட்ட சொத்து என்று தீர்ப்பாகியுள்ளது என்றும், அதனால்தான் அந்த வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் மறைத்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.

என் தாத்தா இறக்கும்வரை அவரை என் அப்பாதான் பார்த்துவந்தார். அவருக்கு வைத்தியமும் என் அப்பாதான் பார்த்தார். 3ம் பிரதிவாதி சூர்யா டிரேடர்ஸ் பெட்ரோல் பங்கின் உரிமையாளர் இல்லை என்றால் தெரியாது. மேற்படி பெட்ரோல் பங்க் நஷ்டத்தில் இயங்கி வந்தது என்றும், 3ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியிடம் வெற்றுத்தாளில் கையெழுத்து பெற்றார் என்றும் நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. பெட்ரோல் பங்க் லாபத்தில் இயங்கியது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ........

3ம் பிரதிவாதி, 1, 2 பிரதிவாதிகளை ஏமாற்றி வழக்குச்சொத்தை எழுதிவாங்கிவிட்டார் என்று வாதிகளான நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை, குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கவில்லை. வழக்குச்சொத்து குடியிருப்பு வீடு. வழக்குச்சொத்து கண்ணாரசந்தில் உள்ளது. வழக்குச்சொத்திற்கு செல்வதற்கு 250 அடி நீளமுள்ள சந்து வழியாக செல்ல வேண்டும். அந்த பகுதியில் உள்ள வீடுகள் அனைத்தும் சிறிய ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட்ட வீடுகள் என்றால் சரியல்ல. பெரிய வீடுகளும் உள்ளன. 3ம் பிரதிவாதி உயிலின் அடிப்படையில் தகுந்த மறுபயன் கொடுத்து வழக்குச்சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்திற்குரிய மின்கட்டணத்தை ஆன்லைன் மூலமாக செலுத்துகிறோம். 3ம் பிரதிவாதி பெயரில் மின்இணைப்பு உள்ளது. 3ம் பிரதிவாதி பெயரில் மின்இணைப்பு பெயர்மாற்றம் ஆனதை மறைப்பதற்காக, அதற்கு முந்தைய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பெயர்மாற்றம் ஆன பிறகுதான் அந்த விவரம் எங்களுக்கு தெரியவந்தது. 2015 – 2016ல் தெரியவந்தது. 3ம் பிரதிவாதி எங்கள் குடும்ப நிலையை தெரிந்துக்கொண்டு, வழக்குச்சொத்தில் எங்களை வாடகைக்கு அமர்த்தினார் என்றால் சரியல்ல. 2018ம் வருடம் வரை நாங்கள் வாடகை செலுத்தி வந்தோம் என்றும், அதன்பிறகு பொய்யான காரணங்கள் கூறி வாடகை செலுத்துவதை தவிர்த்து வருகிறோம் என்றும் சொன்னால் சரியல்ல. வாடகை பாக்கி அதிகமானதால், வாடகை பாக்கியை தர வேண்டும் என்றும், இல்லையென்றால் வீட்டை காலி செய்ய வேண்டும் என்றும் 3ம் பிரதிவாதி கூறினார் என்றால் சரியல்ல. கொரோனா காலத்திற்கு பின்னிட்டு நாங்கள் வாடகை செலுத்தவில்லை ......

என்றும், அதனால் வாடகை செலுத்துமாறும், அல்லது வீட்டை காலி செய்ய வேண்டும் என்று 3 ம் பிரதிவாதி கேட்டதால் நாங்கள் இவ்வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல.

என் அப்பா பெயரில் திருமாநிலையூர் கிராமத்தில் சர்வே எண். 811 ல் விவசாய நிலம் உள்ளது என்றால் அந்த நிலம் என் தாத்தா பெயரில் உள்ளது. அந்த நிலத்தை என் அப்பா விற்பனை செய்துவிட்டார். அந்த விற்பனையை ஆட்சேபித்து நாங்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் பணம் தரவில்லை என்று காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அருணாச்சலம் என்பவர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நொடிப்பு மனு எண். 18/2021 என்ற மனுவை தாக்கல் செய்தார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அந்த மனு சமரசமானது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வீட்டை காலி செய்ய சொன்னதால் மற்ற சொத்தை பொறுத்து நடவடிக்கை எடுக்காமல், இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரம் காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கு வழக்கு மூலம் கிடையாது என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u>

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்